பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

20 12 2024 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

2. நாடாளுமன்ற வளாகத்தின் எந்தவொரு பகுதியிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

3. உலகின் இரண்டாவது மிகப்பெரிய மெட்ரோ ரயில்வே சேவையைக் கொண்ட நாடாக இந்தியா விரைவில் திகழும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கியுடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்த தாம் தயாராக உள்ளதாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

5. உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டி அடுத்த ஆண்டு புதுதில்லியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

<<<<>>>>

நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இந்திய வனப்பணி பயிற்சி அதிகாரிகளிடையே உரையாற்றிய அவர், நாடாளுமன்றத்தில் விவாதம், உரையாடல் நடைபெறவில்லை எனில் அது நாட்டின் ஜனநாயக மாண்பைக் குலைக்கும் என்று தெரிவித்தார்.

வளர்ச்சி, சுற்றுச்சூழல் ஆகியவற்றை அரசியல் ரீதியாக பார்க்கக்கூடாது என்று அவர் கேட்டுக்கொண்டார்.

வளர்ச்சி நடவடிக்கைகளுக்காக வனப்பகுதிகளின் நிலம் கையகப்படுத்தப்படும் நிலையில், அதனை ஈடுசெய்ய காடு வளர்ப்பில் ஈடுபட வேண்டும் என்று திரு. ஜக்தீப் தங்கர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

நாடாளுமன்ற வளாகத்தின் எந்தவொரு பகுதியிலும் அரசியல் கட்சியினரோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

காங்கிரஸ், பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே நேற்று நடந்த விவகாரத்தால் 2 உறுப்பினர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து, திரு. ஓம்பிர்லா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

<<<<>>>>

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற போராட்டத்தின்போது இரண்டு பிஜேபி உறுப்பினர்கள் காயமடைந்ததை அடுத்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி மீது தில்லி காவல் நிலையத்தில் பிஜேபி புகார் செய்துள்ளது.

இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. அனுராக் தாக்கூர், தேசிய ஜனநாயகக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் இச்சம்பவம் நிகழ்ந்ததாக கூறினார்.

உரிய வழியில் நாடாளுமன்றத்திற்கு செல்லுமாறு பாதுகாப்புப் படையினர் திரு. ராகுல் காந்தியை கேட்டுக்கொண்ட நிலையில் அவர், அதனை புறக்கணித்து கோபமடைந்ததாக குறிப்பிட்டார்.

இதற்கிடையே காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினரும் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. திக்விஜய் சிங், பாரத ரத்னா அம்பேத்கர் சிலை அருகே போராட்டம் நடத்த தாங்கள் முடிவு செய்திருந்த நிலையில் பிஜேபி உறுப்பினர்கள் அங்கு திரண்டு அமளியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டினார்.

டாக்டர் அம்பேத்கருக்கு எதிராக கூறப்பட்ட கருத்துகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பும் வகையில் இது அமைந்ததாகவும் திரு. திக்விஜய் சிங் கூறினார்.

இந்நிலையில் பிஜேபி அளித்த புகாரை அடுத்து திரு. ராகுல் காந்தி மீது தில்லி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று நிறைவடைகிறது.

ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா, வக்ஃப் திருத்த மசோதா, உள்ளிட்ட முக்கிய மசோதாக்கள் இந்தக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட்டன.

ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 25ஆம் தேதி தொடங்கிய குளிர்கால கூட்டத்தொடர் இன்றுடன் நிறைவு பெறுகிறது.

<<<<>>>>

புதுதில்லியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொண்டார்.

மத்திய அமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கிறித்துவ சமூகத்தைச் சேர்ந்த முக்கியப் பிரதிநிதிகளுடன் பிரதமர் உரையாடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உலகின் இரண்டாவது மிகப்பெரிய மெட்ரோ ரயில்வே சேவையைக் கொண்ட நாடாக இந்தியா விரைவில் திகழும் என்று மத்திய வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சகத்துடன் இணைந்த நாடாளுமன்ற ஆலோசனைக் குழு உறுப்பினர்களிடையே நேற்று அவர் உரையாற்றினார்.

நாடு முழுவதும் நகர்ப்புற போக்குவரத்து கட்டமைப்பை வலுப்படுத்த மத்திய அரசு முயற்சி மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

நாட்டில் 23 நகரங்களில் சுமார் 993 கிலோ மீட்டர் தொலைவுக்கு மெட்ரோ ரயில் சேவை உள்ளதாக அவர் தெரிவித்தார்.

28 நகரங்களில் சுமார் 997 கிலோ மீட்டர் தொலைவுக்கு மெட்ரோ ரயில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு. மனோகர் லால் குறிப்பிட்டார்.

<<<<>>>>

உலக அளவில் சுற்றுலத்துறையில் இந்தியா முன்னேற்றம் அடைந்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், உலக அளவில் சுற்றுலா மேம்பாட்டு குறியீட்டின்படி மொத்தமுள்ள 119 நாடுகளில் இந்தியா 39வது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக தெரிவித்தார்.

முன்னதாக 2021ஆம் ஆண்டு இந்தியா 54வது இடத்தில் இருந்ததாக அவர் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் அன்னையின் பெயரில் மரக்கன்று நடும் இயக்கத்தின்கீழ் இதுவரை 102 கோடியே 82 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், அரசு நிறுவனங்கள், கிராமங்களில் உள்ள அமைப்புகள், இளைஞர்கள், மாணவர்கள் உள்ளிட்டோரின் பங்களிப்புடன் இப்பணி நடைபெற்றுள்ளதாக அவர் கூறினார்.

இந்த இயக்கம் மூலம் மரக்கன்றுகள் நடுவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல், அவற்றை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வையும் மக்களிடையே ஏற்படுத்துகிறது என்று திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

வாக்காளர் பட்டியலில் இளம் வாக்காளர்களை அதிக அளவில் இணைக்கும் வகையில் தேர்தல் ஆணையம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற இளம் வாக்காளர்களை அதிக அளவில் சேர்ப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம் இப்பணியை சிறப்பாக மேற்கொண்டுள்ளது என்று அவர் பாராட்டினார்.

கல்லூரி மாணவர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்க்க வேண்டும் என்று திருமதி அர்ச்சனா பட்நாயக் வலியுறுத்தினார்.

<<<<>>>>

யுக்ரைன் உடனான போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக அந்நாட்டு அதிபர் திரு. ஜெலன்ஸ்கியுடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்த தாம் தயாராக உள்ளதாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளார்களிடம் பேசிய அவர், ஒப்பந்தம் ஏதேனும் ஏற்பட்டால் அதுகுறித்து தமது நாட்டு அரசு அங்கீகரித்த யுக்ரைன் அதிகாரிகள் அவசியம் கையெழுத்திட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அத்துடன் யுக்ரைன் விவகாரம் தொடர்பாக அமெரிக்க அதிபராக தேர்நதெடுக்கப்பட்டுள்ள திரு. டொனால்ட் ட்ரம்புடன் சமரசப் பேச்சு நடத்த தாம் தயாராக உள்ளதாகவும் கூறினார்.

ரஷ்யா பலவீனம் அடைந்துள்ளதாக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டை திரு. விளாடிமிர் புடின் நிராகரித்தார்.

<<<<>>>>

நைஜீரியாவில் பள்ளி ஒன்றில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்ட நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 35 மாணவர்கள் உயிரிழந்தனர். 6 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

சுமார் 5 ஆயிரம் மாணவர்கள் இந்த நிகழ்ச்சியில் திரண்டிருந்த நிலையில் இச்சம்பவம் நிகழ்ந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இபாதன் நகரில் இந்நிநகழ்ச்சியை ஏற்பாடு செய்தது தொடர்பாக 80 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ள நைஜீரிய அதிபர் திரு. போலா டினுபு, சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிதேசம், மேற்கு ராஜஸ்தான், ஜம்மு-கஷ்மீர், லடாக், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர் ஆகிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இன்று கடும் குளிர் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 2 அல்லது 3 நாட்களுக்குத் தொடரும் என்றும் அது கூறியுள்ளது.

ராஜஸ்தானின் கிழக்குப் பகுதி மற்றும் ஜார்கண்ட் மாநிலத்தில் இன்று இரவு கடும் பனிமூட்டம் இருக்கும் என்றும் அது தெரிவித்துள்ளது.

ஆந்திர கடலோரம் மற்றும் ஏனாம் பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டி அடுத்த ஆண்டு புதுதில்லியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதம் 26ஆம் தேதி முதல் அக்டோபர் மாதம் 5ஆம் தேதி வரை இப்போட்டி நடைபெறும் என்று உலக பாரா தடகள சம்மேளனம் தெரிவித்துள்ளது.

---------------

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா, 60 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை வென்றது.

மும்பையில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 217 ரன் எடுத்தது.

ஸ்மிரிதி மந்தனா 47 பந்துகளில் 77 ரன்னும், ரிச்சா கோஷ் 21 பந்துகளில் 54 ரன்னும் எடுத்தனர்.

218 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ், 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 157 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

இந்திய அணியின் பந்துவீச்சாளர் ராதா யாதவ் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியில் இந்திய அணியின் ரிச்சா கோஷ், 18 பந்துகளில் 50 ரன் எடுத்ததன் மூலம் மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி போட்டியில் விரைவாக அரை சதம் எடுத்த உலக சாதனையை சமன் செய்தார்.

அத்துடன் மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி போட்டியில் அதிக ரன் எடுத்த சாதனையையும் இந்தியா படைத்தது.

**<<<<The End>>>>**